Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை: சதம் 15

JAFFNA COLLEGE LIBRARY 7 SEP 1971




போன்: 7199

பொ. அம்பலவாணர்

தங்க வைர

நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றோட்,

யாழ்ப்பாணம்.



# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

தேசிய தினசரி

தபால் பெட்டி எண். 49 போன்: 389



உங்களுக்குத் தேவையான

இலங்கையில் தயாரிக்கப்பெற்ற

மட்பாண்ட

சுகாதார பாவனைப்

பொருட்களை

மலிவானவிலையில்

பெற்றுக்கொள்ளலாம்

கதிர் ஹாட்வெயர்ஸ்

11/1 ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7130 தந்தி: KATIR


மலர் 13 ஆவணி 22 றஜப் 16 (7—9—7) செவ்வாய்க்கிழமை இதழ் 208

# 3 மாதத்துக்கு 86 கோடியே 20 லட்சம் ரூபா செலவு

## ஆட்சிமன்றத்தில் இன்று இடைக்கால பட்ஜட்

கோட்டை, செவ் — இவ்வாண்டு அக்டோபர் 1ம் தேதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ம் தேதி வரையுமுள்ள மூன்றுமாத காலத்துக்கான வரவுசெலவுத் திட்டத்தை நிதியமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா இன்று ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கிறார்.

86 கோடியே 20 லட்சம் ரூபாய்க்கான செலவினங்கள் இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை விளைகாலத்தை நிதி ஆண்டாக வருகிறஆண்டிலிருந்து பிரகடனம் செய்யவிருப்பதையொட்டி இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுகிறது. இதுவரை அக்டோபர் மாதம் தொடக்கம் செப்டம்பர் மாதம் வரையிலான 12 மாத காலமே நிதிஆண்டாக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் உணவுப் பொருள் உற்பத்திக்கு 42 கோடி ரூபாவும், 5 லட்சம் ரூபாய்க்கு அதிகமான தொகையை தொழில் நுட்ப வேலைகளுக்கும், பொது நிர்வாகத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வங்காளதேச பிரச்னை

இன்று மாலை பிற்பகல் 2 மணிக்கு ஆட்சிமன்றம் கூடும் போது நிதியமைச்சர் இந்த வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பார்.

இன்றையபட்ஜட்விவாதத்தின்போது தமிழரசுக்கட்சியினர் வங்காளதேச பிரச்னை பற்றிப் பேசவிருக்கின்றனர். அரசாங்கத்தை ஆதரிக்கும் கட்சிகளைச் சேர்ந்த சிலர், வங்காளதேச பிரச்னையில் மாறுபட்ட கருத்துடையவர்களாக இருப்பதினால் இந்த விடயத்தில் அரசாங்கத்தின் நிலைஎன்ன என்பதை அறிந்து கொள்ளுவதற்கு இது வாய்ப்பாக அமையும் என தமிழரசுக்கட்சி நம்புவதாக கட்சிப் பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். வங்காளதேசத்தை இலங்கை அங்கீகரிக்கவேண்டும் என்று தனிநபர் பிரேரணை ஒன்றை தமிழரசுக்கட்சியினர் ஏற்கனவே ஆட்சிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கது தெரிந்ததே.

இன்று செனற் சபையும் கூடுகிறது

சுதந்திர துறைமுகமாக

## “திருமலை வேண்டாம்; காலியை மாற்றுக!”

### தஹநாயக்கா கோரிக்கை

காலி, திங்கள் — காலித் துறைமுகத்தைச் சுதந்திரத் துறைமுகமாகப் பிரகடனப்படுத்தும்படி காலி எம். பி. டாக்டர் டபிள்யு. தஹநாயக்கா, கப்பல் தொழில் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் திரு பி பி கலுகல்லேயைக் கேட்டிருக்கிறார்.

இலங்கை சுதந்திரத் துறைமுகம் ஒன்றை அமைக்கும் வாய்ப்புகள் பற்றிச் சில அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாக அறிகிறேன். இதற்குத் திருகோணமலையே மிகவும் பொருத்தமான இடம் என்று சில அதிகாரிகள் கருதுவதாகவும் தெரிகின்றது. ஆனால் சுதந்திரத் துறைமுகமாக விளங்கக் காலித் துறைமுகத்துக்கு நிறைய தகுதிகள் உண்டு மக்கள் தொகைக் கிணங்கத் தென் மேற்குப் பகுதியும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.”

இவ்வாறு காலி எம் பி அமைச்சருக்கு எழுதியுள்ளார்.

திருகோணமலை சுதந்திர மாக்கப்பட்டால் அது விரைவிலேயே கடத்தல்காரர்களுக்கும் மோசடிக்காரர்களுக்கும் ஒரு சொர்க்கமாக மாறிவிடும். ஏனென்றால் அது இந்தியக் கரைக்கு மிகச் சமீபத்திலேயே இருக்கின்றது. இப்பொழுது நடைபெறுவதைவிட நூறு மடங்கு கூடுதலாக மோசடிகள் சுதந்திரத் துறைமுகத்தில் நடைபெறுமென்றும் திரு. தஹநாயக்கா தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை கொலை வழக்கு:

## “தம்பிராசாவை 1-ம் எதிரி கொல்லவேண்டுமென்றார்”

யாழ்ப்பாணம், செவ் — உதவிபொலிஸ் சுப்பிறின்டனிடம் சென்றபோது 1-ம் எதிரிதான்சாக்காவைகொலை செய்தார் என்று தெரியும் கள்ளுக் கொட்டிலில் தான் சாக்காவை கொலைசெய்ததாக 1-ம் எதிரி கூறினார். ஏ. எஸ். பி.யிடம் வேறு பெயர்களை இக்கொலை பற்றி கூறவில்லை

பருத்தித்துறை கொலை வழக்கு விசாரணையில் 1-ம் எதிரியின் அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினம் குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சியமளித்த திருஞான சம்பந்த மூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகிறது.

குறுக்குவிசாரணையின் போது திருஞானசம்பந்த மூர்த்தி கூறியதாவது: கள்ளுக் கொட்டிலில் 1-ம் எதிரி தவராசாதான் இக்கொலைக்கு திட்டம் போட்டுக் கொடுத்ததாக கூறினார். கொலைக்கு உதவிசெய்தது யார் என்று சொன்னாரா என்பது எனக்கு ஞாபகமில்லை. 1-ம் எதிரி தான் இக்கொலைசெய்தாரா என்பதை அறிவதற்காகவே கண்டிக்குச் சென்றேன்.

வழ: சோதிஸ்ரோஸ் உமது வீட்டிலிருந்து எத்தனை மைல்? ஒன்றரை மைல்.

வழ: என்ன ஸ்ரோஸ்? பலசரக்கு.

வழ: சம்பவம்நடந்தஅன்று காலை 7 மணிக்கு வந்தீர்? அங்கேதான் படுத்தேன்.

வழ: தம்பிராசா என்ன சொன்னார்? நான் தேவையில்லாமல் இதுபற்றி கேள்விகள் கேட்பதாகவும், 1-ம் எதிரி என்னை கொலைசெய்ய விருப்பதாகவும் கூறினார்.

வழ: சாக்கா கொலைபற்றி தம்பிராசாவிடம் கேட்டீரா? இல்லை.

வழ: கொலைபற்றி அறிய ஆவல் கொண்டிருந்தீர்? ஆம்

வழ: ஒரு சாக்கா கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று 1-ம் எதிரி கூறினாரா? ஆம்.

வழ: 1-ம் எதிரிதான் கொலை செய்திருக்க வேண்டும் என நினைத்தீர்? ஆம்

வழ: இரண்டாவதுதடவை கடைக்குப்போனீர்? ஆம்

வழ: இரண்டாம் தரம் போய்வந்தபின் நீர்தான் இக் கொலையை செய்தீர் என்றும் எதிரியிடம்கூறினீர்? ஆம்.

வழ: 2-ம் தடவைகடைக்குப் போன போது தான் சாக்கா கொலை பற்றி அறிந்தீர்? ஆம்.

வழ: அந்த நேரத்தில் 1-ம் எதிரி தான்

(6-ம் பக்கம் பார்க்க)

## சுவீப்முடிவுகள்

கொழும்பு, செவ் — நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 361-ம் இலக்க தேசியசுவீப் முடிவுகள் வருமாறு:—

1 வது பரிசு
40 S 0236 ரூபா 91500

2—வது பரிசு
37 A 0141 ரூபா 36600

3—வது பரிசு
27 Y 0444 ரூபா 9150

தலா 475ரூபா 50சதம் ஆறுதல்பரிசு பெறும் 100 டிக்கட்டுக்கள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 04 A 0847 | 17 A 0195 |
| 28 A 0787 | 32 A 0887 |
| 04 B 0577 | 05 B 0617 |
| 28 B 0500 | 22 C 0449 |
| 35 C 0056 | 37 C 0260 |
| 07 D 0138 | 16 D 0221 |
| 23 D 0011 | 23 D 0680 |
| 26 D 0217 | 37 D 0705 |
| 06 E 0019 | 16 B 0169 |

(6-ம் பக்கம் பார்க்க)

## முருங்கக்காய் கறி ஓர் உயிரைப் பலிகொண்டது

யாழ்ப்பாணம், செவ் — முருங்கக்காய் கறியிலிருந்து ஏற்பட்ட பிரச்னை ஒருவரின் உயிரையே பலிகொண்டுவிட்டது. கருமபுரத்தைச் சேர்ந்த வே சிற்றம்பலம் என்பவரது மரண விசாரணையின் போது இது தெரியவந்தது.

தமது வீட்டிற்கு மரணமானவர் சாப்பிடப் போனதாகவும் அங்கு முருங்கக்காய் கறிமட்டுமே இருந்ததாகவும் தொடர்ந்து பல நாட்களாக முருங்கக்காய் கறியையே சமைத்துவருவதாகக் கூறி தமது மனைவியுடன் சிற்றம்பலம் வாக்குவாதப்பட்டு மனைவியை அடித்ததாகவும் மனைவி தமது கணவருக்கு திருப்பி அடித்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது.

(5ம்-பக்கம்பார்க்க)

## வரிவிளம்பரம்

தரித சலவைக்கு மிக்க வைற் சலவைப்பவுடர் பாவியுங்கள். பாவித்த வெற்றுறை ஒன்றை அனுப்பி எமது வெளியீட்டுப் புத்தகங்களில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். மிக்க வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம். 3520

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) பொறியியலாளரின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

## விற்பனைக்கு

ராதா மணிமார்க் சந்தனாதி தைலம் கூந்தலை நீளமாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும். மூளைக்குக்குளிர்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கும். ஆயுர்வேத மூலிகைகள் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி யாழ்ப்பாணம், கொழும்பு 2523

## விற்பனைக்கு

இருபாலைச் சந்திக்கருகாமையில் - கோண்டாவில் பழம் ரோட் முகப்புடைய முப்பது (30) பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பத்துப் பரப்பு துண்டுகளாகவும் விற்கப்படும். 38 கஸ்தூரி வீதி. நீராவியடியில் தொடர்பு கொள்ளவும். 3319

வீடு அல்லது வைஞ்சிபம் கட்டுவதற்கேற்ற ஒரு பரப்பு அரைக்குளி காணி. இரண்டாம் குறுக்குத் தெரு. ஆஸ்பத்திரி வீதிக்கருகாமையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு விளம்பர இல: 3317 C/O ஈழநாடு. யாழ்ப்பாணம். 3317

## வாடகைக்கு

வேலைபார்க்கும் பெண்கள் அல்லது மாணவிகளுக்கு உணவு வசதிகளுடன் அறை வாடகைக்குண்டு. விபரங்களுக்கு: 31, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 3322

## வெலிங்டன் சினிமா

மானிப்பாய்

பி. ப. 2-30, 6-30, 10-00

என். எஸ். கண்ணப்பா - வி. என் ஜானகி - நம்பியார் நடித்த

**தேவகி**

## தேவை

சரியாக 28 வயதுடைய அழகும் குணமும் நிரம்பிய நல்ல குடும்பத்தில் உள்ள சகல சீதனத்துடனும் (தென்னம் காணி உள்ள) பெண் தேவை. வீட்டுப் பணி முதலிய பாடங்கள் படித்திருக்க வேண்டும். வியாபார ஸ்தலம் இருந்தால் நன்று தாமோதரம்பிள்ளை, ஊறணி காங்கேசன்துறை. 3548

## தேவை

கிராமத்திலுள்ள பிள்ளையார் கோவிலுக்கு அர்ச்சகர் ஒருவர் உடனடியாகத் தேவை. மூன்று வேளைப் பூசையுண்டு. மின்சார வசதியுடைய வீடு கொடுக்கப்படும். கோயில் அர்ச்சனைக் காசும் ஐயருக்கே உரியது. வயது, வீட்டிற்குமிருக்கப்போபவர்களின் தொகை, தற்பொழுது பார்க்கும் வேலை முதலியவற்றைத் தெரிவித்து மற்றும் விபரங்களுக்கு 18-9-71ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 355, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 3550


## நிறைவேறியது

கைதடி, திங்கள்

கைதடிக் கிராமசபையின் 1971—1972 வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேறியது.

மேற்படி கிராமசபைத் தலைவர் திரு. ஆர். செல்லையா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் இத்திட்டம் நிறைவேறியது.

## ‘கைப்பணிக் கிராமம்’

கோண்டை, திங்கள்

இலங்கையின் கைப்பணித் தொழிலை விருத்திசெய்து அதன் மூலம் அன்னிய செலாவணியைப் பெறுவதற்கு விரிவான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இத் திட்டத்தின் கீழ் இலங்கையின் பாரம்பரிய கைப்பணிப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு இவற்றை மேற்கொள்ளும் கைவினைஞர்களுக்கு நல்ல தொகு வருமானம் ஏற்பட வழிவகுக்கப்படும்.

மேலும் இத் திட்டத்தின் கீழ் பாரம்பரிய கைப்பணிக் கிராமமொன்றை உருவாக்குவது எனவும் இத் திட்டத்தை ஆரம்பிக்கவிருக்கும் இலங்கை ஹோட்டல்கள் சங்கத் தலைவர் திரு பி நடேசன் தெரிவித்துள்ளார்.

## “சந்தை அமைக்கவும்”

மயிலிட்டி, ஞாயிறு

“இங்குள்ள மக்கள் தமக்கு வேண்டிய பொருட்களைப் பெறமுடியாது கஷ்டப்படுகிறார்கள். எனவே மயிலிட்டியில் நவீன சந்தை ஒன்றை அமைக்க உதவுக.”

இவ்வாறு வர்த்தக அமைச்சரை மயிலிட்டி சென் மேரிஸ் மீன்பிடிச் சங்கத்தினர் கோரியுள்ளனர்.

## முத்தமிழ்மன்ற நிர்வாகிகள்

மாவிட்டபுரம், திங்கள்

மாவை முத்தமிழ் மன்ற வருடாந்த ஆலோசனை மாநாடு நேற்றுநடைபெற்ற சமயம் பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆலோசகர்கள் திரு வே சுந்தரலிங்கம், வைத்திய கலாநிதி திரு ரி இராஜேந்திரம், திரு க சிவலிங்கம், பி எஸ் பற்றிக்ஸ் வலிவடக்கு காரியாதிகாரி), மு திடவீரசிங்கம் முன்னாள் பட்டினசபைத் தலைவர் காங்கேசன்துறை

நிர்வாகஸ்தர்கள் பிரம்மஸ்ரீ க ஓ சண்முகநாதக் குருக்கள், உதவிநிர்வாகஸ்தர் அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர் வித்துவான் வ செல்லையா.

அத்தியட்சகர்கள் இயல் சமயம் பண்டிதர் வே சங்கரப்பிள்ளை, இசை நாதஸ்வர கலாநிதி எஸ் கே இராசா, நாடகம் ஏ ரி பொன்னுத்துரை பி ஏ, பொருளாளர் வை விஜயகுமார்- நிதி ஏ வி பி கந்தசாமி, எண் பரிசோதகர்: ப விஸ்வநாதன், காரியாலய பொறுப்பாளர்: ஏ சிவபாலன்.

## உப உணவு உற்பத்திக்கு ஊக்கம்

யாழ்ப்பாணம், செவ்.

எதிர்வரும் மாரிக்கு இனி தென்மராட்சித் தொகுதியில் உப உணவு உற்பத்தியை அதிகரிப்பதில் யாழ். மாவட்ட விவசாய விரிவாக்கப்பகுதி அக்கறை செலுத்திவருகிறது மரவள்ளி, உளுந்து, வெங்காயம், வெள்ளைப்பூடு முதலிய உபஉணவுகளைப் பெருமளவில் உற்பத்திசெய்யுமாறு கிளிநொச்சித்தொகுதி விவசாயிகளை யாழ். விவசாய விரிவாக்க அதிபர் விவசாயப் போதனாசிரியர் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இத் தானியவகைகள் இப்பகுதி மேட்டுநில விவசாயிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது.

## விளையாட்டுப் போட்டி

கைதடி, திங்.

கைதடி மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அதிபர் திரு. ஆர். மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணக் கல்வி அதிகாரி திருமதி ஆர் எஸ். பாமர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். முத்துக்குமாரசாமி இல்லம் இம்முறை முதலிடத்தைப் பெற்றுச் சம்பியனாகியது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருமதி ஆர். நடராஜா பரிசில்களை வழங்கினார்.

## அச்சுவேலி லாலா சோப் ஸ்தாபனத்தாரின் மின்னொளியில் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம் செவ்:

அச்சுவேலி வடக்கு அந்தோனியார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள விளையாட்டு திடலில் மின்னொளியில் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று ஆரம்பமானது நாளை இரவு 8-30 மணிக்கு அச்சுவேலி யூஸ்ராரும் நெல்லியடி வெல்வெற் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன லாலா சோப் ஸ்தாபனத்தார் இந்தக் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியை ஏற்பாடு செய்துள்ளனர்.


## மனோகரா

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30

சனி, ஞாயிறு காலை 10-30

பம்பாயில்

**சி. ஐ. டி. 555**

(தமிழ்)

## நாகம்ஸ்சினிமா

சுன்னாகம்

தினசரி: 4-30

சனி, ஞாயிறு 10-30

SODOM and COMORRAH

தினசரி 6-30, 9-45

சனி, ஞாயிறு 2-30

கூண்டுக்கிளி

REGAL Jaffna

Daily 5-15 & 7-15 m. p.

Franco Nero

in

TEXAS ADDIOS

(Cinemas cope)

தினசரி பி.ப. 2-00, 9-45

ஜெமினி—ஜமுனா நடித்த

**நல்ல தீர்ப்பு**

## 3-வது ஜனத்திரள் வாரம்

**வெலிங்டன்** (யாழ் நகர்) பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00 மணி.

**லிடோ** (யாழ்.நகர்) (காலை 10-30 மட்டும்)

மற்றும்

கெப்பிட்டல்—பிளாஸா

திரைகளில்



நடிகர் திலகம்

**சிவாஜி கணேசன்**

(3 வேடங்களில்)

**ஜெயலலிதா**

நாகேஷ், நம்பியார், சுந்தரராஜன் நடித்த

# தெய்வ மகன்

**லிடோ** [யாழ்நகர்]

தினசரி பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.

திலிப்குமார் - வைஜயந்திமாலா நடித்த

# ம து ம தி

(ஹிந்திச் சித்திரம்)

**ராணி** (யாழ்ப்பாணம்)

சிவாஜி - சரோஜாதேவி நடித்த

தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்

# இருவர் உள்ளம்

**வின்சர்** [யாழ்ப்பாணம்]

தினசரி 4 காட்சிகள்

★ ஜெமினிகணேசன்

★ கே. ஆர். விஜயா

நாகேஷ், பி. எஸ். வீரப்பா, நிர்மலா நடித்த

# ச ங் க ம ம்

## ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி காலை 10 - 30 பிற்பகல் 2 - 30 மாலை 6 - 30 இரவு 10மணிக்கு

பின்னணிப் பாடகர்கள்

டி. எம். சௌந்தரராஜன்

ஏ. எல். ராகவன்

ராஜ்ஸ்ரீ - விஜயகுமாரி - நாகேஷ்

டி. எம். சௌந்தரராஜனின் இனிய பாடல்கள் நிறைந்த ஒப்பற்ற ஓவியம்



# பாக். சிறைகளிலிருந்து ஏராளமானோர் விடுதலை

புதுடில்லி, செப் 6

பாகிஸ்தானில் காவலில் வைக்கப்பட்டிருந்த ஏராளமானவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

கலவரங்களில் ஈடுபட்டவர்கள் என்று கருதப்படும் இளைஞர்களில் ராணுவ வீரர்கள் அரசாங்க ஊழியர்கள் போன்றவர்களும் உள்ளனர்.

அரசியல்வாதிகளுக்கும் கிரிமினல் குற்றவாளிகளுக்கும் இந்த பொதுமன்னிப்பு அளிக்கப்படவில்லை.

கிழக்குப் பாகிஸ்தானில் சிவிலியன் ஆட்சி ஏற்பட்டு வருவதாக ராணுவ ஆட்சியாளர்கள் ஒரு பிரமையை ஏற்படுத்தி வருகிருர்கள் என்று வங்காள தேச பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ள திரு. தாஜுதீன் அகமத் தெரிவித்திருக்கிருர். மக்களிடமிருந்துதான் ஆட்சிக்கு வருவோர் அதிகாரத்தைப்பெற வேண்டுமே தவிர ராணுவ அதிகாரிகளிடமிருந்து அல்ல என்று அவர் கூறினர்.

வெளிநாடுகளிலுள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளின் பாஸ்போர்டுகளை தடுத்து வைப்பதின் மூலம் அவர்கள் நாடு மாறுவதைக் தடுத்துவிட முடியாதென்று வங்காளதேசத்தைச்சேர்ந்த இன்னெரு தலைவர் கருத்து வெளியிட்டிருக்கிருர்.

உலக சமாதான சபையின் பிரதிநிதிகளை கிழக்கு வங்காளம் சம்பந்தமாக சந்தித்து பேச ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்ட் இணங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

பாகிஸ்தான் விமானங்களைத் தகர்த்தெறிவதற்கென வங்காளதேச இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கப்படுவதாக ஒரு பிரமுகர் அறிவித்திருக்கிருர். இந்த இளைஞர்கள் தங்களை இதற்காகத் தயார்படுத்திக் கொள்வதாகவும் இவர்கள் தற்கொலைப் படையைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

## கலைவாணர் அரங்கு

சென்னை, செப். 6

சென்னை பாலர் அரங்கு கலைவாணர் அரங்கு என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் 15-வது மறைவு தின வைபவத்தில் தமிழக முதல்வர் திரு மு கருணாநிதி இத்தகவலை வெளியிட்டார்

திரு என் எஸ் கிருஷ்ணனுடன் நெருங்கியதொடர்பு கொண்டிருந்தவர்களில் ஒருவருக்கு ஆண்டுதோறும் நிதி உதவி அளிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளதாக முதல்வர் தெரிவித்தார் இதன்முதற்படியாக இவ்வருடம் உடுமலை நாராயண கவிக்கு ரூபா 15 ஆயிரம் அளிக்கப்பட்டது.

முதல்வர் கருணாநிதியை போஷகராகக் கொண்ட டிரஸ்டி ஒன்று இதன் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது.

---

## இந்தியா-சோவியத் ஒப்பந்தம் தமிழ்நாடு மக்கள் மகிழ்ச்சி

சென்னை, செப். 6

இந்திய-சோவியத் நட்புறவு ஒப்பந்தத்தைத் தமிழ்நாடு மக்கள் வெகுவாக வரவேற்பர் என்று தமிழக முதல்வர் கூறியிருக்கிருர்.

தமிழக முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான திரு. மு. கருணாநிதி கோபாலபுரத்தில் உள்ள தமது இல்லத்தில் "சோவியத் நாடு" இதழுக்குப் பேட்டியளித்த போது இந்திய- சோவியத் சமாதான, நட்புறவு, ஒத்துழைப்பு ஒப்பந்தம் பற்றிக் கருத்துத் தெரிவித்தார்.

சமதர்ம இலட்சியத்தை எய்தியுள்ள சோவியத் யூனியனுக்கும், சோஷலிஸப் பாதையில் முன்னேற உறுதி கொண்டுள்ள இந்தியாவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள இந்தப் "புதிய உறவு" தம்மைப் பெரு மகிழ்ச்சியில் ஆழ்த்துவதாக அவர் கூறினர்.

"இந்தியா சோவியத் யூனியன் இரு நாடுகளுக்கு இடையே நீண்ட நாட்களாக இருந்துவரும் நல்லுறவு இந்த ஒப்பந்தத்தின் மூலம் மேலும் பிரகாசம் அடைந்துள்ளது" என்று திரு. கருணாநிதி உறுதியான நம்பிக்கை தெரிவித்தார்.

## பாதிக்கப்பட்ட ஆசிரியருக்கு சட்டத்தின்மூலம் பரிகாரம்!

### ஜாதிக குருசங்கம் நடவடிக்கை

கோட்டை, திங்கள்

அரசியல் காரணங்களுக்காக இடமாற்றம் செய்யப்பட்ட அல்லது வேறுவிதத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் இந்த இன்னல்களுக்குச் சட்டத்தின்மூலம் பரிகாரம்தேட சிறிலங்கா ஜாதிக குருசங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளகிறது.

மேற்படி சங்கத்தின் அதிகாரியொருவர் இந்தப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டுள்ளதாவது:

அரசியல் காரணங்களுக்காக பல ஆசிரியர்கள் இடத்துக்கிடம் அடிக்கடி மாற்றப்படுகிருர்கள். இவர்களுக்காகக் கடைசிவரை சங்கம் போராடிபேதிடும் மேலும் தேர்முகப் பரீட்சை நடத்திப் பல ஆசிரியர்களுக்கும் பதவிஉயர்வு வழங்கப்பட்டது. ஆனல் இவர்களில் நால்வரின் பதவிஉயர்வு இவர்களது தொகுதியின் ஆட்சிமன்ற அங்கத்தவர்களது தலையீட்டால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த நால்வரும் குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியின் முக்கிய அங்கத்தவர்களாம் இந்த ஆசிரியர்கள் சார்பில் சங்கம் சட்டபூர்வமான எதிர்ப்பு நடவடிக்கை எடுக்கத் தயாராகவுள்ளதாக அவர்களுக்குத் தெரிவித்துள்ளது.

கல்வியமைச்சர் அ ஹாஜ் பதியுதீன் மாமூதுக்கும் சங்கம் இதுசம்பந்தமாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளது

## வானொலி பற்றறிவிலை: கட்டுப்படுத்த கோரிக்கை

காலி, திங்கள்

வானொலிப்பெட்டிகளுக்கு உபயோகிக்கப்படும் டிறை பற்றறிகளின் விலையைக் கட்டுப்படுத்தும்படி காலி மாவட்ட கொடகாவ கிராமசபை அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றது.

அண்மையில் நடைபெற்ற கிராமசபை மாதாந்தக் கூட்டத்தில் இதுசம்பந்தமாக வர்த்தக அமைச்சர் திரு ரி பி. இலங்கரத்னவுக்கு வேண்டுகோள் விடுப்பதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இப்பொழுது வானொலிப் பெட்டிகளுக்கான பற்றறி யொன்றின் விலை 35 ரூபாய்க்குமேல் இருப்பதாகவும். ஏழை வானொலியாளர்களால் இவ்வளவு விலை கொடுத்து பற்றறி வாங்குவது கஷ்டம் என்றும் அங்கத்தவர்கள் கருத்துவெளியிட்டார்கள் உள்நாட்டில் தயாரிக்கப்படும் வானொலிப் பெட்டிகள் மிகவும் தரம் குறைந்து காணப்படுவதாக கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு ரி. பி. சுபசிங்காவுக்கு அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பஸ்களில் புகைபிடித்தல் தடை செய்யப்பட்டதைப் பாராட்டியதுடன்-பஸ்களில் வெற்றிலைபோடுவதைதடை விதிக்குமாறு இ போ.ச வை கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## தொழிற்சாலைகளை மாணவர் பார்வையிடுவர்

### பாடத்திட்டத்தில் ஓர் அம்சம்

கோட்டை, திங்கள்

மாணவர்கள் தொழிற்சாலைகளைச் சென்றுபார்வையிடுதல் கல்விப் பாடத்திட்டத்தில் ஒரு அம்சமாக இடம்பெறவேண்டுமெனக் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது

வகுப்பில் போதிப்பதன் செய்முறை அறிவையும் உடனுக்குடன் மாணவர்கள் பெற்றுக்கொள்வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே கல்வி அமைச்சு மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளது.

தொழில் தொழில் வாய்ப்பு ஆகிய பற்றியும் மாணவர்கள் தொழிற்சாலைகளைப் பார்வையிடுவதால் அறிந்துகொள்ள வாய்ப்பாகவிருக்கும் எனக் கல்வியமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

சோவியத் யூனியனில் மாணவர்கள் வாரத்தில் ஒரு முறை தொழிற்சாலைகளைச் சென்று பார்வையிடுகிருர்கள். இதனல் அவர்கள் செயல்முறைக்கல்வியையும் உடனுக்குடன் பெறக்கூடியதாகவிருக்கும் என்வும் இப்புதிய கல்வித்திட்டத்தால் மாணவர்கள் தங்கள் அறிவுக்கும் விருப்புக்கும் ஏற்றதொழிலைப்பெறக் கூடியதாகவும் இருக்கும் எனவும் மேற்படி அதிகாரி விடுத்துள்ளார்

---

## புத்தூர் ஒளிமயமானது

பருத்தித்துறை, திங்கள்

இம்மாத ஆரம்பத்திலிருந்து புத்தூர் கிராமச்சபை நிர்வாகத்துக்குட்பட்ட பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. மின்சாரப் பொத்தானை அழுத்தி இம் மின்சாரத் திட்டத்தைச் சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்துப் புத்தூர் கிராமச் சபைத் தலைவர் திரு எஸ். எம் திருநாவுக்கரசு பேசும்போது, மின்சார வசதிகள் சமுதாயத்தில் சோம்பலை வளர்ப்பதற்குப் பதிலாக, உற்பத்தியையும் வளத்தையும் பெருக்க உதவவேண்டுமென்றும் முக்கியமாக விவசாயிகள் இதன்மூலம் குறைந்த சிரமத்துடன் மிகுந்த நன்மையடைய வேண்டுமென்றும் கூறினர்.

---

## விநியோகத்தில் சாரணர்

பருத்தித்துறை, திங்கள்

அண்மையில் கரவெட்டி நெல்லியடி, புத்தூர் ஆகிய பகுதிகளில் பொது மக்களுக்குக் கூப்பன் புத்தகங்கள் விநியோகிப்பதில், கிராம சேவகர்களுக்கு உதவியாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயச் சாரணர் கடமையாற்றினர். வயோதிபர், நோயாளிகள் ஆகியோருக்கு முதலிடமளித்து அவர்களுடைய கூப்பன்களை வழங்குவதில் அவர்கள் பெரிதும் சிரத்தை காட்டினர்.

## வட அயர்லாந்து நெருக்கடி

# ஹீத் - லிஞ்ச் பேச்சு வார்த்தை

லண்டன், செப் 6

வட அயர்லாந்தில் நடைபெற்றுவரும் சம்பவங்களைப்பற்றியும் வட அயர்லாந்துக்கும் ஐரிஷ் குடியரசுக்குமிடையிலான எல்லையில் அடிக்கடி ஏற்பட்டுவரும் பூசல்களைப்பற்றியும் இன்று வட ஐரிஷ் குடியரசுப் பிரதமமந்திரி திரு. லிஞ்சும் பிரிட்டிஷ் பிரதமர் திரு ஹீத்தும் சந்தித்துப் பேசவிருக்கிருர்கள்.

எல்லைப் பகுதியில் பூசல்களைத் தவிர்க்க மேலும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கலாம். வட அயர்லாந்து சம்பந்தமான பிரிட்டிஷ் அரசின் நீண்டகால கொள்கை என்ன தடை செய்யப்பட்ட ஐரிஷ் குடியரசு ராணுவத்தின் நடவடிக்கைகள் என்பன போன்ற விஷயங்கள்பற்றி இரு பிரதமர்களும் ஆலோசனை நடத்துவார்கள்.

வட அயர்லாந்து நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கென ஐரிஷ் குடியரசு ராணுவம் என்று கூறிக்கொள்ளும் ஸ்தாபனம் தெரிவித்த 5 அம்சத் திட்டத்தை வட அயர்லாந்து அரசாங்கம் நிராகரித்துவிட்டது. வட அயர்லாந்தில் ஏற்பட்டுவரும் குழப்பங்களை அங்குள்ள பிஷப்புகள் சபை ஒன்று வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

நேற்று பெல்பாஸ்ட் நகரில் ராணுவ வாகனங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது- பல இடங்களிலும் சிறுசிறு சம்பவங்கள் அறிவிக்கப்பட்டன,

## "இறைவன் சந்நிதியில்

# முனைப்பு நீங்கி நினைப்புத்தோன்றும்"

யாழ்ப்பாணம், செவ்

"நான் என்ற முனைப்புஒருவரிடம் தோயுற்ற நிலையில் நீங்கி இறைவனைப்பற்றிய நினைப்புத் தோன்றுகின்றது இந்த உண்மையை நோயில் படுத்திருக்கும் நோயாளிகள் உள்ள வைத்தியசாலையில் நாம் காணலாம். மனிதன் தன்னை மறந்து இறைவனுடன் பற்றுக்கொள்ளுகின்றதற்கு யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் கோவில்கொண்டுள்ள ஞானவைரவர் வழிகாட்டுவார்"

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அமைந்துள்ள ஞானவைரவர் பேரில் கவிஞர் முருகசூரியன் இயற்றிய பதிகவெளியீட்டுக்குத் தலைமைதாங்கிய நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் பேசும்போது தெரிவித்தார்.

பதிகவெளியீட்டுக்கு முன்னுரை ஆற்றிய முன்னாள் மாநில கல்வி அதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் ஆஸ்பத்திரியில் நோயாளிகளின் நடுவில் ஒலியற்ற நிலையில் அமைதியாக சிறந்த பதிகம் வெளியிடப்படுகின்ற தென்பதைக் குறிப்பிட்டார்.

பூசையுடன் ஆரம்பமான வெளியீட்டு விழாவின் போது ஆசிரியரால் பதிகம் அரங்கேற்றப்பட்டது. சுவாமிநாதத் தம்பிரான் திரு முருகசூரியனுக்கு கவிரத்னம் என்ற பட்டத்தைச் சூட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

கவிஞர் இ. நாகராஜன் வாழ்த்துப்பாடியதுடன் கவிஞரைப் பாராட்டிப் பேசினர்.

கவிஞர் செ. சுந்தரம்பிள்ளை சைவப்புலவர் சி. வல்லிபுரம், நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன மாணிக்கவாசக சித்தாந்த சரபம் க. கணபதிப்பிள்ளை, முதலியார் செ. முத்துத்தம்பி, திரு. கு. வி. செல்வத்துரை ஆகியோர் ஆய்வுரை செய்தனர்.

பதிகம்கூட்டத்தில்இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

## பிரிட்டிஷ் படங்களுக்கு வெள்ளிப் பதக்கங்கள்

லண்டன், செப். 6

வெனிஸ்நகரில் தற்போது நடைபெற்று வரும் 22 வது சர்வதேச விவரணப்பட விழாவில் மூன்று பிரிட்டிஷ் படங்களுக்கு வெள்ளிப் பதக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இம் மூன்றும் ஆகஸ்ட் 29ம் திகதி வெனிஸில் திரையிடப்பட்டன.

அவற்றுள் ஒன்று "காற்று எனது எதிரி" என்ற தலைப்புடைய சூழல் காற்றில் ஏற்படும் அசுத்தங்களையும் அதனைத் தடுக்க பிரிட்டனில் எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் இப்படம் சித்தரிக்கிறது. இருபத்தாறு நிமிடங்கள் ஓடும் இவ்வர்ணப் படத்தை அன்ரனி இக்கிஸன் அஸோஸியேட்ஸ் தயாரித்திருக்கின்றனது.

## கொன்ஸ்ரன்டைன் சிமாட்டி காலமானர்

போர்ட்அப்ஸ்பெயின்செப் 6

பிரபல கிரிக்கட் வீரராகவும், அரசியல் ஞானியாகவும் இருந்து அண்மையில் காலஞ்சென்ற கொன்ஸ்ரன்டைன் பிரபுவின் மனைவியான கொன்ஸ்ரன்டைன் சீமாட்டி காலமானர் கொன்ஸ்ரன்டைன் பிரபு இரண்டு மாதங்களுக்குமுன் காலமானது தெரிந்ததே.

"இறக்குமதியாகும்

# மோட்டார் வாகனங்கள் தரப்படுத்தப்படும்"

கோட்டை, திங்கள்

"இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்கள் யாவும் தரப்படுத்தப்படும்" என உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன தெரிவித்துள்ளார்

அன்னிய செலாவணியை மீதப்படுத்தும் நோக்குடனேயே இந்தத்தரப்படுத்தல் மேற்கொள்ளப்படவிருக்கிறது

தற்போது இறக்குமதி செய்யப்படும் கார், பஸ், வான் லொறிகள் உட்பட சகல மோட்டார் வாகனங்களும் தரப்படுத்தப்படும் எனவும் இதற்காக விரைவில் சட்டமியற்றப்படும் எனவும் வர்த்தக அமைச்சர் திரு. இலங்கரத்ன தெரிவித்துள்ளார்

அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனம் விரைவில் மேற்படி வாகனங்களின் இறக்குமதியையும் உதிரிப்பாக இறக்குமதியையும் பொறுப்பேற்கவுள்ளது. தற்போது இந்த இறக்குமதியில் 30 வீதமே அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகிறது. மீதி 70 வீத இறக்குமதியையும் தனியார் வர்த்தக ஸ்தாபனங்கள் மேற்கொள்கின்றன.

வாகன இறக்குமதியைத் தரப்படுத்தல் பெருமளவில் நம்நாட்டுக்கு நன்மை பயக்கும் என வர்த்தக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்

## 11 சங்கங்கள் ஒன்றாக இணைந்தன

குருநகர், திங்கள்

காங்கேசன்துறைப் பகுதி கடற்றொழில் பரிசோதகர் பகுதிக்குட்பட்ட 11 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. மேற்படி சங்கங்களின் கோரிக்கைகளையும், தேவைகளையும் ஒருமுகப்படுத்தும் நோக்குடன் வட்டாரக் கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தின் காங்கேசன் துறைப்பகுதி நிர்வாக உறுப்பினர் எம். செல்வராசாவின் முயற்சியால் இக்கூட்டு முயற்சி பயனளித்துள்ளது.

மாவிட்டபுரம், மயிலிட்டி, ஊரணி வலித்தூண்டல் ஆகியபகுதிகளில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட மகாநாட்டில் இந்த இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமாசத்தலைவர் ஆர். ஜெகநாதன் தலைமையில் ஊரணி புனித அந்தோனியார் சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெற்ற இம்மகாநாட்டில் இத்தொழிலாளர்களின் பிரச்னைகள் அடங்கிய 5 அம்சத் தீர்மானங்களும் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## "தமிழ்க்கடிதங்களுக்கு ஆங்கிலத்தில் பதில்"

ஊரதீவு, திங்கள்

"இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தமிழில் எழுதும் கடிதங்களுக்கு ஆங்கிலத்தில் பதில் எழுதுகிறது. இது ஆங்கிலம் தெரியாதவர்களை சிரமத்துக்குள்ளாக்கும் செயலாகும். நம்நாட்டு மக்களின் தாய்மொழிகளில் ஒன்றான தமிழ் இருக்க அந்நியமொழியான ஆங்கிலத்தில் பதில் எழுதுவது அவமானத்துக்குரியது"

மேற்கண்டவாறு தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வா. பொ. இரத்தினம் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்னவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## கந்தபுராண காண்டம்

யாழ்ப்பாணம் செவ்வாய்

"நல்லது செய்யாது தீயவை செய்து கடவுளை தூய அன்புடன் வணங்கியவன் சூரன். அவன் மிகவும் தவ வலிமையானவன். தூய மனப்பான்மை இருந்தும் கடவுளுடன் யுத்தம் செய்ய வேண்டாமென்று பலர் கூறியும் அதைமறுத்தான் சற்றில் கடவுள்தான் ஆட்கொண்டார்" இவ்வாறு வண்ணைப்புலத்தில் வித்துவான் க. ஆறுமுகம் கந்தபுராண உற்பத்தி காண்டத்தை தொடர்ந்து முருகன் ஆலயத்தில் படித்து பயன் கூறும்போது கூறினார்.

—(குவிம)

## ஆண்டுவிழாக் கொண்டாடுவர்

யாழ்ப்பாணம், செவ்

திருநெல்வேலி இளம்விவசாயிகள் கழகத்தின் 12வது ஆண்டுநிறைவு விழா இம்மாதம் 11-ம் திகதி நடைபெறவிருக்கிறது திருநெல்வேலி இந்துவாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்கு உதவி விற்பனை ஆணையாளர் திரு. என். சிவசிதம்பரம் தலைமை வகிப்பார். நல்லூர் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. அருளம்பலம் யாழ். சேவட்ட விவசாய அதிபர் திரு பொ மாணிக்கவாசகர், யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

விவசாய அறிவுப்போட்டி விவசாயக் கருத்தரங்கு நாடகம் முதலிய நிகழ்ச்சிகள் விசேஷ நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

## "பெற்றோரே முழுப் பொறுப்பு"

குருநகர், திங்கள்

"மதக் கல்வியின் போதனை தற்போதைய பாடசாலைகளில் போதாமலிருப்பதால் எதிர்கால குழந்தைகளின் போக்கில் மாற்றம் ஏற்படலாம். இந்த நிலையிலிருந்து எமது எதிர்காலச் சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்கு முழுப் பொறுப்பையும் பிள்ளைகளின் பெற்றோரே பொறுப்பேற்க வேண்டும்."

இவ்வாறு கோரும் தீர்மானம் நேற்று முன்தினம் கரம்பன் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மறைக்கல்வி கருத்தரங்கில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. வண. ஜி. பாலசுந்தரம் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் சமயப் பிரசாரக்குழுக்கள் தொகுதிவாரியாகத் தெரிவுசெய்யப்பட்டன.

## பொலிஸ் வென்றது

பருத்தித்துறை, திங்கள்

வதிரி தமிழ்மன்ற ஆதரவில் நடைபெற்று வரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ் பொலிஸ் விளையாட்டுக் கழகமும் சாவகச்சேரி மோகனதாஸ் கழகமும் மோதிக்கொண்ட போது பொலிஸ் கோஷ்டி 3-0 ஆட்டங்களால் வெற்றியீட்டியது.

இதே சுற்றுப்போட்டியில் இமையாணன் கோஷ்டியும், அல்வாய் மனோகரா வும் மோதிக் கொண்டதில் இமையாணன் 2:0 ஆட்டங்களால் வென்றது. திரு சே இரத்தினசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 22-ம் திகதி

(7-9-71)

மேஷம்- மனநிறைவுக்கு இடமுண்டு. மதிப்பும் உயரும். அதிவாற்றலைப் புகழும் கிடைக்கும். இறை நம்பிக்கையுடன் இக்லத்திலும் அமைதி நிலவும்.

ரிஷபம்- அறவழியை நாடுவீர்கள். தெய்வசிந்தை மேலோங்கி நிற்கும். புண்ணிய யாத்திரை மேற்கொள்ளப்படலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

மிதுனம்- வாகனச்சாரதிகள் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறுவர் தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும் மேலிடத்து சிபார்சும் கிடைக்கும்.

கடகம்- இதயத்தில் மகிழ்ச்சிவெள்ளம் பொங்கும் இனசனம் கூடுவர். புத்திரசுகத்துடன் தொழில் துறையில் வெற்றியும் கிடைக்கும், இன்று திருப்தியான தினம்.

சிம்மம்- உறவாடிக் கெடுப்பதற்கும் பகையாளிகள் வருவர். உற்சாகம் குன்றும். பிரயாணத்தின் போது பொருள் தவறக் கூடும். சிலருக்கு உஷ்ண ரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

கன்னி- இல்லத்தில் இனிமை தவழும். வெளியிடத்து தொடர்புகள் பெருகும். இனசனங்களின் உதவியுடன் செல்வாக்குப் பெருகும் பொன்னான நாள்

துலாம்- செய்யும்தொழிலில் சிரமங்கள் தோன்றக் கூடும் உடல் நலமும் சிறிது பாதிக்கப்படலாம், நண்பர் ஒருவர் உங்கள் காலை வாரி விடுவதற்கு முனையக்கூடும்.

விருச்சிகம்- புண்ணிய விருப்புக்களில் ஆர்வமிறக்கும். பொதுத்துறைகளில் புகழ் பரவும். பெரியோர்களுடைய உதவிக்கும் இடமுண்டு. சிறப்பான தினம்

தனுசு- பணம் தாராளமாகக் கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்ட தேவதையின் அணைப்பும் உண்டு. கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்.

மகரம்- சந்தர்ப்பத்திற் கேற்றவண்ணம் பொருள் தாராளமாகக் கிடைக்கும். சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்ட லாபங்களுக்கு இடமுண்டு இன்று சுபதினம்.

கும்பம்- சிந்தனையில் தடுமாற்றம் தென்படும், நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். முன்யோசனையுடன் நடக்கவும்

மீனம்- விரக்தி நிலை உருவாகும். வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

## இடமாற்றம் ரத்து

மாவிட்டபுரம், திங்கள்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் மா. மகாதேவாவின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது

மேற்படி கல்லூரியின் அதிபராக இருந்த திரு. மகாதேவா வெல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கு அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

இக்கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கம், மாணவர் சங்கங்கள் ஆகியன இம் மாற்றத்தை நிறுத்தும்படி எடுத்த நடவடிக்கையின் பேரில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

# மன அமைதிக்கு விளையாட்டு அவசியம்

கோப்பாய் விளையாட்டுக் கழகம் 1950-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு வளர்ந்து வருகின்றது பல விளையாட்டுக்களை ஒழுங்குசெய்துவருகிறது. 20-8-71 தொடக்கம் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி எமது கழக மைதானத்தில் தினமும் மின் வெளிச்சத்தில் (Flood lit) நடைபெற்று வருகின்றது. வடமாகாணத்தில் உள்ள பல கழகங்கள் பங்குபற்றியிருக்கின்றன.

உடைக்கவலை, தினவேலை போன்றவற்றிற் சிக்குண்டு உழைத்து இளைத்துச் சலிக்கின்ற மக்களுக்கு ஆறுதலின்றி விடுதலை பெறவதற்கு விளையாட்டுகள் இன்றியமையாதவையாகும். உடலைக் கட்டுடன் காப்பதற்கும் அறிவைத் தெளிவுபெறச் செய்வதற்கும் மனவமைதி பெறுவதற்கும் மகிழ்ச்சியடைவதற்கும் விளையாட்டுக்கள் மிகவும் துணைபுரிகின்றன. விளையாட்டுக்களைப் பச்சிளங்குழந்தைகள் முதல் படுத்துப் பல்விழுந்த கிழவர்வரை விரும்புகின்றனர். உலகமக்கள் அனைவருக்கும் அவசியமாக்கும் விளையாட்டுக்கள் ஒவ்வொரு நாட்டிலும்வெவ்வேறுமுறையில் அமைந்திருக்கும் ஒரு நாட்டின் இயற்கைச் சூழலுக்கும், வெப்ப, தட்பங்களுக்கும். வழக்க வழக்கங்களுக்கும் தக்கவாறு விளையாட்டுக்கள் அமையும். ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தையும் சிறிய பண்பாடுகளையும் அறிவதற்கு அவர்கள் பழக்கத்திற் கொண்டுள்ள விளையாட்டுக்கள் பெருஞ் சான்று பகர்வனவாகும்.

தமிழ்மக்களின் பண்டை விளையாட்டுக்கள் பல இன்னும் வழக்கத்திலிருந்துவருகின்றன. சங்க இலக்கியப் பாடல்கள் பலவற்றில் பல விளையாட்டுக்களைப் பற்றிய குறிப்புக்கள் நமக்குக்கிடைக்கின்றன குத்துச் சண்டை மல்யுத்தம் போன்ற விளையாட்டுக்கள் இடம்பெற்றன. வெருநற்கிள்ளி சோழவரசன் ஆமூர் மல்லனைப்பொருது அட்டுநின்ற செய்தியைப் புறநானூறு 80-ம் பாடலிற் காணலாம் ஆடவர்கள் விளையாட்டோடு மகளிரின் விளையாட்டுக்களும் சங்க இலக்கியங்களிற் காணப்படுகின்றன. அக்காலத்து மகளிர் பந்துவிளையாட்டின் திறனைச் சிலப்பதிகாரம்போன்ற நூல்களிற் காணலாம்.

விளையாட்டு வசதிகளைப் பெரிய கல்லூரிகளில் ஏற்படுத்திய போதிலும் கிராமங்களில் அல்லது தேர்தல் தொகுதிகளில் சிறந்தமுறையில் ஏற்படுத்த அரசாங்கம் அல்லது தனவந்தர்கள் முன்வரவேண்டும். இன்றைய இளைஞர்கள் நாளைய பிரஜைகள்; நாட்டின் முதுகெலும்புகள். எனவே இளைஞர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாம் அனைவரும் முயலவேண்டும். இளைஞர்களுடைய விளையாட்டுக்கள் எல்லாம் உடல் உறுதிபெறும் வகையிலும், உடல்வலி பெற்று அச்சமும் கூச்சமும் அகலும் விதத்திலும் சுறுசுறுப்புடன் எப்பொழுதும் உழைக்கும் விதத்திலும், மனவூக்கத்தை எழுப்பும் முறையிலும் அமையவேண்டும்

"ஈரோ சுற்றன் கலாசாலை மைதானத்தில் வாட்டர்லூவைப்பெற்றோம்" என உவெலிங்ரன் கோமகன் நெப்போலிய யுத்தத்தின் போது கூறியமை விளையாட்டின் மகிமையைப் பண்பைக் கருங்கக்கூறி விளங்குகின்றது. அதாவது விளையாட்டு விடாமுயற்சியை, தீரத்தை, சாதுரியத்தை,

## மின்னொளியில் போட்டிகள்

மாவிட்டபுரம் திங்கள்

கோப்பாய் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் மின்னொளியில் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆரம்பமாகியுள்ளது.

இம்மாதம் 5-ம் திகதிவரை நடைபெறும் இப்போட்டியில் 40 கோஷ்டிகள் 'ஏ' 'பி' பிரிவுகளில் கலந்து கொள்கின்றன

இச்சுற்றுப்போட்டியின் சில முடிவுகள் பின்வருமாறு:-

'ஏ' பிரிவில் திருநெல்வேலி சிவன் விளையாட்டுக் கழகமும், புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 2-0 ஆட்டங்களால் சிவன் கழகம் வெற்றியீட்டியது

ஆவரங்கால் மெற்றோ விளையாட்டுக்கழகமும், அச்சுவேலி ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டி ஒன்றில் அச்சுவேலிக் கோஷ்டி 2-1 ஆட்டத்தால் வென்றது.

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் வதிரி பொம்பார் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 2-0 ஆட்டத்தால் காங்கேசன்துறை விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

காங்கேசன்துறை தமிழ் அபிவிருத்தி விளையாட்டுக்கழகமும் புத்தூர் உதயசூரியன் விளையாட்டுக்கழகமும் மோதிய போட்டியில் காங்கேசன்துறை கோஷ்டி கலந்துகொள்ளாததால் புத்தூர் கோஷ்டிக்கு வெற்றியளிக்கப்பட்டது

## சரஸ்வதி சாம்பியன்

கைதடி, திங்கள்

கைதடிக் கிராமசபை நடாத்திய கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகம் "சாம்பியன்" பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

சாம்பியன் தெரிவுக்கா சரஸ்வதி விளையாட்டுக் கழகத்துடன் எதிர்த்து விளையாடிய கைதடி ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஒரு செற்றும், சரஸ்வதி விளையாட்டுக் கழகம் மூன்று செற்றும் பெற்றுச் சம்பியனைத் தெரிவு செய்யப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 7—9—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

இரவு 6-15 இளைஞர்கண்டுபிடிப்புகள், 6-30 கண்ணைகாவியம், 6-45 கிராமியப் பாடல்கள், 7-00 தமிழ்மூலம் சிங்களம், 7-15 புல்லாங்குழல். 7-45 பேச்சு. 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் கடிதம், 10-30 செய்தித் தொகுப்பு

தோழமையை, நேர்மையை, நற்பண்பை சுலபமாக ஏற்படுத்துகின்றது.

—கந்தப்பு இரத்தினம். பீ. ஏ

# "எல்லாவற்றுக்கும் அரசை நம்பியிருக்கக் கூடாது"

தாவடி, திங்கள்

எமக்குத் தேவையானவற்றை நாமே ஆக்கிக் கொள்ள முயல்வது சிறப்பாகும்; எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தை நம்பியிருக்கக் கூடாது. எமது கிராமம் எம்மவருடைய பாடசாலை எமது நாடு என்ற உயர்ந்த நோக்கத்தை அடிப்படையாக மனதிற்கொண்டு பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் கல்வி உயர்ச்சிக்காகவும் நாம் ஒவ்வொருவரும் பாடுபடுதல் வேண்டும்'

என்றிவ்வாறு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் திரு: வே. நாகராஜா தேர்வடி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற பழைய மாணவர் சங்கத்தின் 2-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்

'வித்தியாலய வளர்ச்சிக்கா நிதி சேர்க்குமுகமாக தமிழகத்துப் பிரபல பாடகரும், தற்போதைய சினிமா நடிகருமான சீர்காழி திரு. எஸ். கோவிந்தராஜனை அழைப்பதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இக்கூட்டத்தில் பேசிய பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. எஸ். எஸ் குலநாயகம் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இதுவரையில் ஈழத்திருநாட்டிலே அதுவும் யாழ்ப்பாணத்திலே திரு. கோவிந்தராஜனின் இசை நிகழ்ச்சி அண்மையில் நடைபெறவில்லையாதலாலும் ஈழத்து ரசிகப்பெருமக்களுக்கும் இது நல்லதொரு வாய்ப்பாகும்' என்று திரு. குலநாயகம் குறிப்பிட்டார்

திரு. எஸ். கந்தசாமி, திரு. கே சதானந்தன் திரு. கே பஞ்சரத்தினம் ஆகியோரும் மற்றும் பலரும் பேசினர்.

---

## புதிய செனட்டருக்கு வரவேற்பு

வாரதீவு, திங்கள்

செனட்சபை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் லங்கா ஜாதிகுரு சங்கமயின் தலைவர் செனட்டர் பீட்டர் சில்வாவுக்கு நயினாதீவில் வைத்து வரவேற்பளிக்கப்பட்டது.

சங்கமயின் தீவுப்பகுதிக் கிளையினரால் அளிக்கப்பட்ட இவ்வரவேற்புக்கு கிளைச் செயலாளர் திரு. சி. மாணிக்கம் ஆசிரியர் தலைமை வகித்தார். கல்வி வளர்ச்சியில் ஆசிரிய சமூகத்தின் பங்குபற்றித் திரு. சில்வா விளக்கிப் பேசினார். சங்கமயின் வடபகுதிக் கிளைத்தலைவர் திரு கிருஷ்ண பிள்ளையும் பேசினார்.

---

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், செவ்

மண்டியத்தாழ்வு சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு அ த துரையப்பா, திரு எம் சி சுப்பிரமணியம், திரு தம்பு கந்தையா. தலைவர்: திரு கா கந்தசாமி, உப தலைவர்: திரு க துரைராசா, செயலாளர்: திரு க துரைராசா, உப செயலாளர்: திரு எஸ் தவராசா, தனாதிகாரி: பீ வேதநாயகம், உபதனாதிகாரி: திரு பொ சிவராசா.

ஆறுபேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

## உடுவிலில் பட்டர் புருட்

யாழ்ப்பாணம், செவ்வாய்

மலைநாட்டில் ஈரலிப்பான நிலத்தில் மட்டுமே பயிரிடலாமென இதுவரை கருதப்பட்டுவந்த 'பட்டர் புருட்' எனப்படும் பழ மரம் உடுவில் பகுதியில் பயிரிடப்பட்டுப் பெருமளவில் பலன் கொடுத்துள்ளது.

வீட்டுத் தோட்டச் செய்கையில் ஆர்வமுள்ள உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியை ஒருவர் இந்தப் பழ மரத்தைப் பயிர்செய்து நல்ல பலன் அடைகிறாராம்.

---

## தேவார வகுப்பு

அரியாலை, திங்கள்

வருகிற புரட்டாதி விஜய தசமித்திருநாளில் திருமுறைக் கலாநிதி தர்மபுரம் திரு. பி. சுவாமிநாதனின் இலவச தேவார வகுப்புகள் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற உள்ளது

---

# இலங்கையில் சிறு விமானம் தயாரிக்கும் யோசனை

கொழும்பு திங்கள்

குறுகிய தூரங்களுக்குச் செல்லும் பிரயாணிகளை ஏற்றிச் செல்லக் கூடியதான சிறு விமானங்களை இலங்கையில் தயாரிப்பதற்கான தனியார் துறை ஸ்தாபனம் ஒன்று தெரிவித்த யோசனை பற்றி கைத்தொழில் அமைச்சு ஆராய்ந்து வருகின்றன.

பிரிட்டிஷ் உதவியுடன் இலங்கையில் இச் சிறு விமான டாக்ஸிகளைத் தயாரிப்பது பற்றி தனியார் ஸ்தாபனம் ஒன்று யோசனை தெரிவித்திருக்கிறதாம். குறுகிய இடங்களுக்கு பிரயாணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய இந்த விமானங்களில் ஒரு தடவைக்கு 4பேர் போகக் கூடியதாய் இருக்கும்.

இலங்கையில் பாவிப்பதற்கும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் இந்த விமானங்கள் தயாரிக்கப்படலாம் என்று கருதப்படுகிறது. இந்தத் திட்டத்துக்கு சுமார் 80 000 பவுண் ஸ்டேர்லிங் தேவைப்படும் என்று தெரிகின்றது.

(சி பி ஏ)

# வடபகுதி கம்யூனிஸ்ட் (மாஸ்கோ) கூட்டத்திலகுழப்பம்?

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (மாஸ்கோசார்பு) வடமாகாணக்கிளையில் பிரிவினை ஏற்பட்டிருப்பதாகவும் சென்றவார இறுதியில் நடந்த கூட்டம் குழப்பத்தில் முடிவடைந்ததாகவும் அந்தக்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சிலர் தெரிவிக்கின்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கிளையின் ஆண்டுக்கூட்டம் கூட்டப்பட்டிருந்தபோதும் அக்கூட்டம் சென்ற சனிக்கிழமை யாழ். நகரிலுள்ள கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்றபோது அதை ஆண்டுக்கூட்டம் அல்லாமல் விசேஷ கூட்டமாகக்கருதும் படி கொண்டுவரப்பட்ட பிரேரணையை சிலர் ஆட்சேபித்தபோதும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இக்கூட்டம் பற்றி கட்சியின் செயலாளரிடம் கேட்டபோது இச்சமயத்தில் எதுவும் சொல்வதற்கில்லை யென்றும் மத்தியகுழுக்கூட்டம் கூடி ஆலோசித்தபின் பத்திரிகைகளுக்கு அறிவிப்பதாகவும் தெரிவித்தார்

இக்கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டதாகவும் சிலர் வெளிநடப்புச் செய்ததாகவும் ஓர் உறுப்பினர் தெரிவித்தார்

இக்கூட்டத்திற்கு திரு எம் ஸி சுப்பிரமணியம் தலைமைவகித்தார்

முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட சில பிரேரணைகளும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டதாம்,

திரு வி அரியரத்தினம் என்பவர் கட்சியின் நடவடிக்கைகள் பற்றிப் பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்ததாகத் தெரிவித்து அவர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டதாகவும் இதுபற்றிச் சிலர் ஆட்சேபம்தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இரண்டு தினங்கள் நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த கூட்டம் முதல்நாள் பிற்பகலிலேயே குழப்பத்தில் முடிந்ததாகவும் புதிய நிர்வாகிகளுக்குப் பதிலாக ஐவர்கொண்ட நிர்வாகக் குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது

## இப்பகுதியில் நல்ல விளைச்சல்

யாழ்ப்பாணம், செவ்

கிளிநொச்சி, கனகபுரம், திருவையாறு, முதலாம் வாய்க்கால் கோழிப்பண்ணை போன்ற இடங்களில் இந்தச் சிறுபோக வேளாண்மை நல்ல விளைவு கண்டுள்ளன.

கூட்டுறவுச் சங்கங்கள் சிறுபோகம் சாகுபடி செய்தவர் காணிகளில் குடுமிரித்தும் தெங்கு ஸ்தலத்தில் வைத்தும் கொள்வனவு செய்ய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 40 ஆயிரம் புசல் நெல்லு சென்ற ஆண்டிலும் பார்க்க அதிகம் பெற வாய்ப்பாகும்.

(கு வி ம)

---

## வலைகள் சிக்கின

கைதடி, திங்கள்

குருநகர் கடற்கரைப் பகுதியில் 2 நாட்களில் 74 வலைகளைக் குருநகர்ப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சார்ஜன்ட் திரு எம். ஐ. வத்திரா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி கைப்பற்றிய வலைகளையும், வலைகள் வைத்திருந்தவர்களான ஞானம், துரை ஆகியவர்களையும் கடற்றொழிலாளர் சங்கத்திடம் ஒப்படைத்தனர்.

## இசை விழாவின் திடீர் முடிவு

குருநகர், திங்கள்

அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 12வது இசை விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சியை சிறப்பதற்கு ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆயிரக்கணக்கான ரசிகர் கூட்டம் நேற்று ஏமாற்றத்துடன் மண்டபத்தை விட்டு வெளியேறியது.

நேற்றைய நிகழ்ச்சியில் கடைசியாகக் கலந்து கொண்டு பாட ஆரம்பித்தவர் தெலுங்குக் கீர்த்தனை பாடத் தொடங்கியபோது மேற்படி மன்ற நிர்வாகத்தினர் அவரது பாடலுக்கு ஒலிபெருக்கி கொடுக்கமறுத்தனர். இதனால் மண்டபத்தில் பெரும் பரபரப்பேற்பட்டது. பாடிக்கொண்டிருந்தவர் தொடங்கிய பாடல் முடியும்வரை ஒலிபெருக்கியில்லாமலே பாடிக் கொண்டிருந்தார். உள்ளே நின்ற சிலர் அவரது பாடலை நிறுத்துமுகமாக எதிர்க்குரல் கொடுக்கத் தொடங்கினர் வேறு சிலர் ஒலிபெருக்கி கொடுக்குமாறு கோஷம் செய்தனர் இந்நிகழ்ச்சியின்போது மன்றத்தின் செயலாளர் ரசிகர்களுக்கு விடுத்த வேண்டுகோளில் "தமிழிசையை வளர்க்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இயங்கிவரும் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம் கடந்த 9 நாட்களாக நடத்திவரும் இவ்விழாவில் எல்லாக் கலைஞர்களுக்கும் பாடகர்களுக்கும் ஒரே கட்டுப்பாடுதான் விதித்திருந்தோம் எமது மன்றத்தின் விழாவில் எல்லாக் கலைஞர்களும் தமிழில் பாடவேண்டுமென்பதே அக்கோரிக்கை. கலைஞர்களும் இதைக் கடைப்பிடித்து மன்றத்தின் கொள்கைகளுக்கு மதிப்புக் கொடுத்துவந்தனர்'' என்றார்.

## கெனமனும் புதிய கட்சியும்

வீடமைப்பு அமைச்சர் திரு பீட்டர் கெனமன் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகிப் புதிய கட்சியை ஆரம்பிக்கலாமென்று சுயாதீனப் பத்திரிகா சமாஜம் வெளியிடும் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துச் செய்திவெளியிட்டுள்ளன ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் அங்கத்தவராகச் சேரலாமென்றும் அவை ஹேஷ்யம் தெரிவித்துள்ளன

---

## முருங்கக்காய்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனைவி திருப்பி அடித்ததைத் தாங்கமுடியாமல் சிற்றம்பலம் நச்சுதிராவகம் அருந்தியதாகக் கூறப்பட்டது. கிளிநொச்சிமரண விசாரணை அதிகாரி திரு எம் யோகலிங்கம் ஜே பி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்,

---

## ரயில்மோதி மரணம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

குறிஞ்சா தீவு உப்பளத்தில் கடமையாற்றிய எஸ் வடிவேலு என்பவர் ரயிலினால் மோதுண்டு மரணமானார் ரயில்பாதை வழியே சென்றுகொண்டிருந்தபோது இவரை ரயில் மோதியதாக மரணவிசாரணையின்போது தெரியவந்தது.

துண்டு துண்டாக சிதறிக் கிடந்த இவரது உடல்உறுப்புகளை ஒன்றுசேர்த்து அடையாளம் காணப்பட்டது கிளிநொச்சி மரண விசாரணை அதிகாரி திரு எம் யோகலிங்கம் ஜே பி விபத்து மரணம் எனத்தீர்ப்பளித்தார்

---

# "பல்கலைக்கழக மாணவர் தேவாரம் படிக்க வெட்கப்படுகிறார்கள்"

## பேராசிரியர் கவலை

சுழிபுரம், திங்கள்

"இன்று பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் தேவாரம் படிக்க வெட்கப்படுகிறார்கள். தேவார திருவாசகங்களைப் படிக்க மாணவர்களைத் தூண்ட வேண்டும். அன்பு வழியில் கருத்துக்களை வலியுறுத்த வேண்டும். நல்ல அரிய கருத்துகள் நிறைந்த சைவ சித்தாந்தம் எமது கையிலுள்ளது. இதனால் எமது சமயத்தை அழிக்க எவராலும் முடியாது.

கேத்திர கணிதம் போல பதி பசு பாசத்துக்கு விலக்கணம் வரை வகுத்து மெய்கண்ட தேவர் நூல் செய்தார். இன்று வெளியிடப்பட்டுள்ள 'சிவஞான சித்தியார் சுபக்கம்' நூல் சைவ மக்களுக்கு கிடைத்தற்கரிய ஓர் அரிய பொக்கிஷமாகும்'

இவ்வாறு யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகத்தின் 'சிவஞான சித்தியார் சுபக்கம்' நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்து பேசிய பேராசிரியர் சிவஞான கலாநிதி திரு. ஆ. வி. மயில்வாகனம் குறிப்பிட்டார். விழா ஆராதனையுடன் ஆரம்பமாகியது. கழகத் தலைவர் திரு சி. சிவகுருநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். கூட்டுறவு அச்சகமுகாமையாளர் திரு. ஜே. ஏ. நல்லையாவுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் விழா நடைபெற்றது.

பேராசிரியர் ஆ வி மயில்வாகனம் மேலும் பேசுகையில், 38 ஆண்டுகள் நான் பல்கலைக்கழகத்தில் கல்வி போதித்தபோது சைவ மாணாக்கர்களின் மனநிலை என்ன என்பது எனக்கு ஓரளவு தெரியவந்தது. மாணிக்கவாசகர் காலத் தொடக்கம் 12-ம் நூற்றாண்டுவரை அன்புநெறி தழைத்தது ஈழத்தைப் பொறுத்த வரையில் நாவலரின் பணியினால் மேன்மை பெற்றனர் பக்தி நெறி சார்ந்த பெரிய புராணம் அன்புநெறிசார்ந்த கந்தபுராணமும் படிக்க வேண்டும்என நாவலர் விரும்பினார். தென்னிந்தியாவில் மூன்றும் நூற்றாண்டு தொடங்கி நிலவிவந்த சைவக் கருத்துக்களைச் சேக்கிழார் திரட்டித்தந்துள்ளார். சைவத் தத்துவங்கள் கருத்துக்களைத் திரட்டி 'சிவஞான போதம்' நூல் உருவாக்கப்பட்டது என்றார்

பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை வாழ்த்துரை வழங்கினார். பண்டிதர் சோ. இளமுருகனார் இயற்றிய வாழ்த்துப்பாடலை இசைப் புலவர் திரு. சி செல்லத்துரை பாடினார். நூலின் முதற்பிரதியை திரு. அ தில்லையம்பலம் வாங்கினார். திரு ம ஸ்ரீகாந்தா, பண்டிதர் எஸ் ஏகாம்பரம், முதலியார் செ முத்துத்தம்பி, திரு சி கதிரவேற்பிள்ளை (பா. உ) ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள்.

